07.07.2017

தினமணி

# நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி



தருமபுரி: பருவமழை தவறினாலும், பருவம் போகாமல், புதிய தொழில்நுட்பமமான நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய முடியும் என்று தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் என். ராஜேந்திரன் மற்றும் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பி.ரவி ஆகியோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, மேலும் அவர்கள் கூறியது: பயிர் வகையிலே துவரை பயிர் மட்டும் பருவம் மாறாமல் பயிர் செய்ய வேண்டும். பருவம் தவறி பயிர் செய்தால் கண்டிப்பாக மகசூல் பாதிக்கும். இதனைப் போக்க, புதிய தொழில்நுட்மான நாற்று நடவு துவரை சாகுபடி முறையைப் பின்பற்றி, துவரையில் அதிக மகசூல் பெறலாம். இதற்கான பருவம் ஆடிப் பட்டம் சிறந்தது.

**நாற்றங்கால் தயாரித்தல்:** துவரை நாற்று நடவு முறை சாகுபடிக்கு, ஏக்கருக்கு 1 கிலோ விதை மட்டுமே தேவைப்படுகிறது. ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பெண்டாசிம் அல்லது 2 கிராம் திரம் அல்லது 4 கிராம் டிரிக்கோடேர்மாவிரிடி போன்றவற்றில் ஏதாவது ஒன்றில் விதை நேர்த்தி செய்து 24 மணி நேரத்துக்குப் பிறகு, ஒரு பாக்கெட் ரைசோபியம் நுண்ணுயிர் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். மணல், மண், எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து 2?? மைக்ரான் உள்ள 6"-க்கு 4" அளவுள்ள நெகிழிப் பைகளில் நிரப்பி விதைக்கப் பயன்படுத்த வேண்டும். பைகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க பைகளைச் சுற்றி 4 துளைகள் போட வேண்டும். பின்னர், விதை நேர்த்தி செய்த விதைகளை ஒரு பைக்கு ஒரு விதை என்ற அளவில் ஒரு செ.மீ. ஆழத்தில் விதைத்து, ஒவ்வொரு நாளும் தண்ணீர் தெளித்து பாதுகாக்க வேண்டும். இவ்வாறு, விதைப்பு செய்யப்பட்ட பைகளை நிழலான இடங்களில் வைத்து 30 - 35 நாள்கள் பாரமரிக்க வேண்டும். நடுவதற்கு சில நாள்கள் முன் இளம் வெயிலில் நாற்றுகளை வைத்து, கடினப்படுத்தி பின்பு நடவு செய்தல் நல்லது.

**நடவு செய்தல்:** தனிப்பயிர் சாகுபடிக்கு 15 செ.மீ. அளவுள்ள குழிகளை, 5-க்கு 3 அடி இடைவெளிலும் ( 2904 பயிர் / ஏக்கர்), காராமணி, உளுந்து போன்ற ஊடுப்பயிர் சாகுபடி செய்யக்கூடிய இடங்களில் 6-க்கு 3 அடி இடைவெளிலும் (2420 பயிர் / ஏக்கர் ) குழிகள் எடுக்க வேண்டும். நாற்றுகளை நடுவதற்கு 15 நாள்களுக்கு முன், குழிகளை மண் எருவைக் கொண்டு நிரப்பி வைக்க வேண்டும். ஒரு குழிக்கு ஒரு செடி வீதம் நடவு செய்யப்பட வேண்டும். பின்னர், மண்ணின் ஈரப்பதத்துக்கு ஏற்ப 3-4 முறை பாசனம் செய்யப்பட வேண்டும். நடவு செய்த 30-40 நாள்கள் வரை களையின்றி பராமரிக்க வேண்டும்.

**உர நிர்வாகம்**: மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேருக்கு யூரியா 27.5 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 156 கிலோ, பொட்டாஷ் 21 கிலோ இட வேண்டும். இறவைப் பயிர்களுக்கு யூரியா 55 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 312 கிலோ, பொட்டாஷ் 42 கிலோ ஆகிய உரங்களை நடவு செய்த 20-30 நாள்கள் கழித்து மண் அணைப்பதற்கு முன் இட வேண்டும். மேலும், துத்தநாக சல்பேட் 10 கிலோ செடியைச் சுற்றி இடுவதால், அதிக விளைச்சல் கிடைக்கும்.

**நுனி கிள்ளுதல்:** நடவு செய்த 20-25 நாள்கள் கழித்து அல்லது விதை விதைத்த 50-55 நாள்கள் கழித்து 5 அல்லது 6 செ.மீ அளவுக்கு நுனிக் குருத்தைக் கிள்ளி விடுவதால், பக்க கிளைகள் அதிகரிக்கும். இதனால் பயிரின் மகசூல் அதிகரிக்கும்.

**பயறு வொண்டர் தெளித்தல்** : பூ பூக்கத் தொடங்கும் பருவத்தில், பயறு வொண்டரை ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் தண்ணீரில் கலந்து இலை வழியாகத் தெளிப்பதன் மூலம் பூ உதிர்தலைத் தடுக்கலாம். இதனால் அதிக மகசூல் பெறலாம். மேலும், வறட்சியைத் தாங்கி வளரவும் வழிவகை செய்கிறது.

**நாற்று நடவு சாகுபடியின் நன்மைகள்:** நடவு முறையில் மழை தாமதமானாலும் குறித்த பருவத்தில் பயிர் செய்ய முடியும். துவரை நடவு அதிக ஆழத்தில் செய்யப்படுவதால், நன்கு வேர் வளர்ச்சி காணப்பட்டு, பயிர் வறட்சியைத் தாங்கி வளரும். வரிசை நடவு முறை செய்யப்படுவதால், பயிர் பாதுகாப்பு முறைகளை எளிமையாகவும் திறம்படவும் செய்ய முடியும். கணிசமான அளவுக்கு விதை சேமிப்பு செய்ய முடிகிறது. இதனால், குறைந்த அளவுக்கு கிடைக்கும் புதிய ரக விதைகளை அதிக பரப்பளவு சாகுபடிக்கு கொண்டு வர முடியும். நுனி கிள்ளுவதால் அதிக பக்க கிளைகள் உருவாகி, அதிக விளைச்சல் கிடைக்கிறது.

எனவே, விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் பருவமழை தவறினாலும், இந்தப் புதிய தொழில்நுட்பமான துவரை நாற்று நடவு தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து, அதிக மகசூல் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

# தென்னையில் கூன் வண்டு தாக்குதல் மேலாண்மை



கிருஷ்ணகிரி: விவசாயிகளுக்கு நல்ல வருவாய் தரக் கூடிய பயிராக தென்னை தமிழகம் முழுவதும் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. இத்தகைய பயிரான தென்னையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் மகசூல் குறைந்து விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. குறிப்பாக, கூன்வண்டு தாக்குதலால் தென்னை மரம் பட்டுப்போகிறது. எனவே, விவசாயிகள் கூன்வண்டு தாக்குதல் மேலாண்மையைக் கையாள்வதன் மூலம் தென்னை சாகுபடியில் மகசூல் குறைவதை தடுத்து, நல்ல வருவாய் ஈட்டலாம்.

அறிகுறிகள்: வண்டு தாக்குதலுக்கு உள்ளான மரத்தின் கீழ் பகுதியில் சிறப்பு நிறச் சாறு வடிந்த நிலையில், சிறு சிறு துளைகள் காணப்படும். இந்த துளையினுள் கூன் வண்டு இருப்பதைக் காணலாம். தென்னை மரத்தின் உள் ஓலைகள் மஞ்சள் நிறாகவும், நுனிப்பக்கத்தில் உள்ள நடுகுருத்து வாடிய நிலையிலும் காணப்படும். பின்னர், மரம் முற்றிலும் காய்ந்துவிடும்.

**பூச்சி விவரம்:** கூன் வண்டின் முட்டையானது வெள்ளை நிறத்தில் காணப்படும். புழுக்கள் லேசான மஞ்சள் நிறத்தில் காணப்படும். வண்டானது சிவப்பு கலந்த மஞ்சள் நிறத்திலும், மார்புப் பகுதியில் 6 அடர்ந்த புள்ளிகள் காணப்படும். ஆண் வண்டுகள் நீல முகத்துடன் காணப்படும்.

**மேலாண்மை முறைகள்:** கூன்வண்டு தாக்குதலால் காய்ந்து போன மரம்,

சேதமடைந்த மரத்தை அகற்றி, கூன்வண்டின் இனப்பெருக்கத்தை தடுக்கலாம். தென்னந்தோப்பை துய்மையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதன் மூலம் கூன்வண்டின் தாக்குதலைத் தவீர்க்கலாம். உழவுப் பணியின்போது தென்னை மரம் சேதமடையாமல் பாதுகாப்பாக இருக்க வேண்டும். காண்டாமிருக வண்டுகள் தாக்கிய மரத்தை கூன்வண்டுகள் தாக்கும்.

அதனால், மரத்தை காண்டாமிருக வண்டுகள் தாக்காமல் இருக்க தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கூன்வண்டுகள் முட்டை இடுவதைத் தடுக்க மணல், வேப்பங்கொட்டை தூளை 2:1 என்ற அளவில் கலந்து, மரத்தின் குருத்து பகுதியிலும், மேல் உள்ள மரத்தின் 3 மட்டைகளின் கீழ்ப் பகுதியிலும் இட வேண்டும். கூன்வண்டுகளைக் கவர்ந்து இழுக்கும் பேரொழியுர் எனப்படும் கவர்ச்சி மற்றும் உணவுப் பொறிகளை இரண்டு ஹெக்டேருக்கு ஒன்று வீதம் வைத்து கூன்வண்டுகளைக் கட்டுப்படுத்தலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி அருகே உள்ள மூங்கில் புதூர் கிராமத்தில் மாணிக்கம் என்ற விவசாயின் நிலத்தில் மேற்கொண்ட சோதனையில் இந்த மேலாண்மை முறை நல்ல பயனைத் தந்துள்ளது என்கின்றனர் பெங்களூரைச் சேர்ந்த வேளாண் அறிவியல் விஞ்ஞானிகள்.

## இன்றைய வேளாண் செய்திகள்

# விவசாயிகள் பொருட்களை வங்கிகள் ஜப்தி செய்யக்கூடாது: சுப்ரீம் கோர்ட்



தமிழக விவசாயிகள் தற்கொலை தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவு: கடன் வசூல் நடவடிக்கையின் போது, விவசாயிகள் பொருட்களை வங்கிகள் ஜப்தி செய்யக்கூடாது.

விவசாய கடன் பாக்கியை கட்டாயபடுத்தி வசூலிப்பதை தவிர்க்க வேண்டும். விவசாயிகள் நலன் சார்ந்த பிரச்னைகளில் முன்னெச்சரிக்கையாக செயல்பட வேண்டும் எனக்கூறியுள்ளது. மேலும், இந்த வழக்கில் கோர்ட்டிற்கு உதவும் வழக்கறிஞரின் அறிக்கை தொடர்பாக தமிழக அரசு விளக்கமளிக்க உத்தரவிட்டு, ஆகஸ்ட் 4ம் தேதிக்கு ஒத்திவைத்தது.தமிழக விவசாயிகள் தற்கொலை தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவு: கடன் வசூல் நடவடிக்கையின் போது, விவசாயிகள் பொருட்களை வங்கிகள் ஜப்தி செய்யக்கூடாது. விவசாய கடன் பாக்கியை கட்டாயபடுத்தி வசூலிப்பதை தவிர்க்க வேண்டும். விவசாயிகள் நலன் சார்ந்த பிரச்னைகளில் முன்னெச்சரிக்கையாக செயல்பட வேண்டும் எனக்கூறியுள்ளது. மேலும், இந்த வழக்கில் கோர்ட்டிற்கு உதவும்

வழக்கறிஞரின் அறிக்கை தொடர்பாக தமிழக அரசு விளக்கமளிக்க உத்தரவிட்டு, ஆகஸ்ட் 4ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

## சீசன் முடிந்தும் மலிவு விலையில் மாம்பழம்

சேலத்தில், சீசன் முடிந்தும், குறைந்த விலைக்கு மாம்பழங்கள் விற்கப்படுவதால், மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

சேலம், வ.உ.சி., மார்க்கெட்டுக்கு, வாழப்பாடி, கன்னங்குறிச்சி, ஆத்தூர், தர்மபுரி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி, தாரமங்கலம், பூசாரிப்பட்டி, காமலாபுரம், இடைப்பாடி ஆகிய பகுதிகளில் இருந்து, மாம்பழங்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. நான்கு மாதங்களாக, மல்கோவா, நடுசாலை, இமாம்பசந், அல்போன்சா மாம்பழங்களை, மக்கள் விரும்பி வாங்கிச்சென்றனர். கடந்த மாதம், மாம்பழ சீசன் முடிந்தது. ஏப்ரலில் பெய்த மழையால், கிளி மூக்கு மாங்காய்களின் விளைச்சல் அதிகரித்தது. இதனால், மார்க்கெட்டுக்கு அவற்றின் வரத்து அதிகரித்தது. நேற்றைய நிலவரப்படி, 15 டன் மாம்பழங்கள் விற்பனைக்கு வந்தன. அதன் விலை, கிலோ, 30 முதல், 40 ரூபாய்க்கு விற்பனையானது. சீசன் முடிந்தும், பழம் விலை குறைவாக இருப்பதால், மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். கடந்த ஆண்டு, இந்த வகை பழம், கிலோ, 90 ரூபாய்க்கு விற்றது குறிப்பிடத்தக்கது.

சேலத்தில், சீசன் முடிந்தும், குறைந்த விலைக்கு மாம்பழங்கள் விற்கப்படுவதால், மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். சேலம், வ.உ.சி., மார்க்கெட்டுக்கு, வாழப்பாடி, கன்னங்குறிச்சி, ஆத்தூர், தர்மபுரி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி, தாரமங்கலம், பூசாரிப்பட்டி, காமலாபுரம், இடைப்பாடி ஆகிய பகுதிகளில் இருந்து, மாம்பழங்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன. நான்கு மாதங்களாக, மல்கோவா, நடுசாலை, இமாம்பசந், அல்போன்சா மாம்பழங்களை, மக்கள் விரும்பி வாங்கிச்சென்றனர். கடந்த மாதம், மாம்பழ சீசன் முடிந்தது. ஏப்ரலில் பெய்த

மழையால், கிளி மூக்கு மாங்காய்களின் விளைச்சல் அதிகரித்தது. இதனால், மார்க்கெட்டுக்கு அவற்றின் வரத்து அதிகரித்தது. நேற்றைய நிலவரப்படி, 15 டன் மாம்பழங்கள் விற்பனைக்கு வந்தன. அதன் விலை, கிலோ, 30 முதல், 40 ரூபாய்க்கு விற்பனையானது. சீசன் முடிந்தும், பழம் விலை குறைவாக இருப்பதால், மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். கடந்த ஆண்டு, இந்த வகை பழம், கிலோ, 90 ரூபாய்க்கு விற்றது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு மாட்டுச்சந்தையில் வியாபாரம் களை கட்டியது

வெளிமாநில வியாபாரிகள் வருகை கூடியதால், ஈரோடு மாட்டுச் சந்தையில், வியாபாரம் களை கட்டியது.

ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தை, நேற்று கூடியது. கடந்த சில வாரங்களாக பல்வேறு காரணங்களால், 50 சதவீதத்துக்கும் கீழ் வியாபாரம் பாதித்தது. இந்நிலையில் நேற்று வியாபாரம், இயல்பு நிலைக்கு திரும்பியதால், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் உற்சாகம் அடைந்தனர். இதுகுறித்து மாட்டுச்சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது:கடந்த ஐந்து வாரங்களாக, பல்வேறு காரணங்களால், மாட்டுச் சந்தை வியாபாரம் பாதித்தது. மாடுகள் வரத்தும், வியாபாரிகள் வருகையும் பாதியானது. அந்த நிலை இந்த வாரம் மாறியது. சந்தைக்கு, 500 பசுக்கள், 450 எருமைகள், 300 வளர்ப்பு கன்றுகள் என, 1,250க்கும் மேற்பட்ட கால்நடைகள் விற்பனைக்கு வந்தன. பசு மாடு, 16 ஆயிரம் ரூபாய் முதல், 32 ஆயிரம் வரை, எருமை, 18 ஆயிரம் முதல், 35 ஆயிரம் வரை, வளர்ப்பு கன்று, 2,000 ரூபாய் முதல், 10 ஆயிரம் வரை விற்பனையானது. தென்மேற்குப் பருவமழையால், கேரளா வியாபாரிகள் வருகை குறைந்தது. அதே சமயம் ஆந்திரா, கோவா, தெலங்கானா, மகாராஷ்டிரா மாநில வியாபாரிகள் அதிகம் வந்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

வெளிமாநில வியாபாரிகள் வருகை கூடியதால், ஈரோடு மாட்டுச் சந்தையில், வியாபாரம் களை கட்டியது. ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தை, நேற்று கூடியது. கடந்த சில வாரங்களாக பல்வேறு காரணங்களால், 50 சதவீதத்துக்கும் கீழ் வியாபாரம் பாதித்தது. இந்நிலையில் நேற்று வியாபாரம், இயல்பு நிலைக்கு திரும்பியதால், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் உற்சாகம் அடைந்தனர். இதுகுறித்து மாட்டுச்சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது:கடந்த ஐந்து வாரங்களாக, பல்வேறு காரணங்களால், மாட்டுச் சந்தை வியாபாரம் பாதித்தது. மாடுகள் வரத்தும், வியாபாரிகள் வருகையும் பாதியானது. அந்த நிலை இந்த வாரம் மாறியது. சந்தைக்கு, 500 பசுக்கள், 450 எருமைகள், 300 வளர்ப்பு கன்றுகள் என, 1,250க்கும் மேற்பட்ட கால்நடைகள் விற்பனைக்கு வந்தன. பசு மாடு, 16 ஆயிரம் ரூபாய் முதல், 32 ஆயிரம் வரை, எருமை, 18 ஆயிரம் முதல், 35 ஆயிரம் வரை, வளர்ப்பு கன்று, 2,000 ரூபாய் முதல், 10 ஆயிரம் வரை விற்பனையானது. தென்மேற்குப் பருவமழையால், கேரளா வியாபாரிகள் வருகை குறைந்தது. அதே சமயம் ஆந்திரா, கோவா, தெலங்கானா, மகாராஷ்டிரா மாநில வியாபாரிகள் அதிகம் வந்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

## வாழைத்தார் வரத்து குறைந்ததால் விலை உயர்வு

கரூர் மாவட்டம், லாலாப்பேட்டையில் உள்ள மண்டிகளில், வாழைத்தார் வரத்து குறைந்து வருவதால், விலை உயர்ந்து வருகிறது.

லாலாப்பேட்டை, வல்லம், பிள்ளபாளையம், திருக்காம்புலியூர், மகாதானபுரம், மகிளிப்பட்டி, வீரவள்ளி, பொய்கைப்புதூர் பகுதிகளில், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை ரகங்களான ரஸ்தாலி, கற்பூர வள்ளி, பூவன் ஆகிய வாழை ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. லாலாப்பேட்டை வாழைத்தார் கமிஷன் மண்டிக்கு வாழைத்தார்கள் விற்பனைக்கு வருகின்றன. இது குறித்து, வாழைத்தார் உரிமையாளர்கள் கூறியதாவது: தற்போது கடுமையான வறட்சி

ஏற்பட்டு, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், வாழை சாகுபடி பரப்பளவு குறைந்தது. வாழைத்தார் தேவை அதிகரித்தும், போதிய விளைச்சல் இல்லாததால், விலை சற்று அதிகரித்துள்ளது. பெரிய வாழைத்தார், 350 ரூபாய், சிறிய வாழைத்தார், 250 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மண்டிகளுக்கு, 500க்கும் குறைவாகவே வாழைத்தார்கள் வரத்தாகின. இவ்வாறு அவர்கள் கூறினர்.

கரூர் மாவட்டம், லாலாப்பேட்டையில் உள்ள மண்டிகளில், வாழைத்தார் வரத்து குறைந்து வருவதால், விலை உயர்ந்து வருகிறது. லாலாப்பேட்டை, வல்லம், பிள்ளபாளையம், திருக்காம்புலியூர், மகாதானபுரம், மகிளிப்பட்டி, வீரவள்ளி, பொய்கைப்புதூர் பகுதிகளில், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை ரகங்களான ரஸ்தாலி, கற்பூர வள்ளி, பூவன் ஆகிய வாழை ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. லாலாப்பேட்டை வாழைத்தார் கமிஷன் மண்டிக்கு வாழைத்தார்கள் விற்பனைக்கு வருகின்றன. இது குறித்து, வாழைத்தார் உரிமையாளர்கள் கூறியதாவது: தற்போது கடுமையான வறட்சி ஏற்பட்டு, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், வாழை சாகுபடி பரப்பளவு குறைந்தது. வாழைத்தார் தேவை அதிகரித்தும், போதிய விளைச்சல் இல்லாததால், விலை சற்று அதிகரித்துள்ளது. பெரிய வாழைத்தார், 350 ரூபாய், சிறிய வாழைத்தார், 250 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மண்டிகளுக்கு, 500க்கும் குறைவாகவே வாழைத்தார்கள் வரத்தாகின. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காய்ந்து வரும் கோரைப்பயிர் விவசாயிகள் கடும் அவஸ்தை

நெரூர் பகுதியில், தண்ணீர் வறண்டதால், கோரைப்பயிர் முற்றிலும் விளைய முடியாத அவல நிலைக்கு சென்றதால், விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். வாங்கல் முதல், நெரூர் வரை, காவிரிக்கரையோரம் ஆயிரக்கணக்கான ஏக்கரில், கோரைப்பயிர் பயிரிடப்பட்டு கோரைப்பாய் தயாரிக்கப்படுகிறது. இந்த கோரைப்பயிரை, நிலத்திலேயே வெட்டி கட்டுக்கட்டுக்களாக வைத்திருக்கின்றனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள்

கட்டுகளாக வாங்கிச் செல்வதுண்டு. இந்நிலையில், வாங்கல் முதல் நெரூர் வரை தண்ணீர் இல்லாததால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கோரைப்பயிர் காய்ந்து இருப்பதுடன் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெரூர் பகுதியில், தண்ணீர் வறண்டதால், கோரைப்பயிர் முற்றிலும் விளைய முடியாத அவல நிலைக்கு சென்றதால், விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். வாங்கல் முதல், நெரூர் வரை, காவிரிக்கரையோரம் ஆயிரக்கணக்கான ஏக்கரில், கோரைப்பயிர் பயிரிடப்பட்டு கோரைப்பாய் தயாரிக்கப்படுகிறது. இந்த கோரைப்பயிரை, நிலத்திலேயே வெட்டி கட்டுக்கட்டுக்களாக வைத்திருக்கின்றனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் கட்டுகளாக வாங்கிச் செல்வதுண்டு. இந்நிலையில், வாங்கல் முதல் நெரூர் வரை தண்ணீர் இல்லாததால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கோரைப்பயிர் காய்ந்து இருப்பதுடன் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

# வேளாண்மை கருவிகள், இடு பொருட்களுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்



வேளாண்மை கருவிகள், விவசாய இடுபொருட்களுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கோவையில் நடைபெற்ற விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜூலை 07, 2017, 04:30 AM

கோவை,

விவசாயிகள் உரிமைக்காக நடைபெற்ற போராட்டத்தின்போது போலீஸ் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கோவையில் உழவர் தின பேரணியும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பீளமேட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி அருகில் தொடங்கிய பேரணியை விவசாயிகள் சங்க கோவை மாவட்டத் தலைவர்கள் தெய்வசிகாமணி, ஆர்.கணேசன் ஆகியோர் தொடங்கிவைத்தனர். கொடிசியா திறந்த

வெளித்திடலில் பேரணி நிறைவடைந்தது. இதில் விவசாயிகள் ஏர்கலப் பையை எந்திய படி வந்தனர். பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், சேலம் மாவட்டத் தலைவர் மாணிக் கம் கொடியேற்றிவைத்தார். போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்த 27 பேர் மற்றும் வறட்சியால் தற்கொலை செய்துகொண்ட 217 விவசாயிகளுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்துக்கு, மாநிலச் செயலாளர் எம்.செந்தில் குமார் வரவேற்றார். மாநிலத் தலைவர் வழுக்குப்பாறை பாலு, பொதுச் செயலாளர் பி.கந்தசாமி தலைமை தாங்கினார்கள். பொருளாளர் ஏ.சண்முகம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். ஓய்வுபெற்ற ஐகோர்ட்டு நீதிபதி எம்.கற்பகவிநாயகம் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார்.

விவசாயிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:-

தடையாணை பெற்றதற்கு கண்டனம்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட, அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற ஐகோர்ட்டு உத்தரவை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் தடையாணை பெற்ற தமிழக அரசுக்கு இந்த கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கி, நதிநீர் இணைப்பை துரிதப்படுத்த வேண்டும். தனிப்பட்ட பயிர் இழப்பீடுக்கும் நஷ்டஈடு வழங்கும் வகையில், பேரிடர் மேலாண்மை சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

விதை, பூச்சி மருந்துகள் சட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும். குறைபாடான விதைகள், பூச்சி மருந்துகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கும் வகையில் சட்ட திருத்தம் மேற்கொள்ள வேண்டும். பயிர் காப்பீடு திட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆதரவான நிலை

இல்லாமல் காப்பீட்டு நிறுவனங்களுக்கு சாதகமாக உள்ளது. எனவே மற்ற காப்பீடுகளை போல பயிர் காப்பீட்டுக்கும் பாலிசிதாரர்களுக்கு உரிய நிவாரணம் கிடைத்திட சட்டம் திருத்தப்பட வேண்டும்.

வேளாண்மை கருவிகள், இடு பொருட்களுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். மத்திய, மாநில அரசுகள் வேளாண்மை விளைபொருட் களுக்கு உரிய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். விலை நிர்ணயம் செய்யும்வரை அரசு மானியங்களையோ, கடன் தள்ளுபடி திட்டங்களையோ ரத்து செய்யக்கூடாது என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.